டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 12.06.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 294 - Madurai | Online Edition

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் இந்தியாவின் சாதனை

## அமைச்சர் பிரகலாத் ஜோஷி பெருமிதம்

புது தில்லி, ஜூன் 11

பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையால், இந்தியா உலகளாவிய தூய்மை எரிசக்தித் தலைவராக உருவெடுத்துள்ளது என்று மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி தெரிவித்துள்ளார். நாட்டின் மொத்த சூரியசக்தித் திறன் 3,445 ஜிகாவாட் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் மிதக்கும் சூரியசக்தி திட்டங்கள் மூலம் 102 ஜிகாவாட் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ள தாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காகப் புதிய திட்டத்தை மத்திய அரசு விரைவில் செயல்படுத்த உள்ளது.

2014-ல் 81 ஜிகாவாட்டாக இருந்த புதைபடிவம் அல்லாத எரிசக்தி திறன், தற்போது 288 ஜிகாவாட்டாக உயர்ந்துள்ளது. அதேபோல், சூரியசக்தித் திறன் 2.8 ஜிகாவாட்டிலிருந்து 155 ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளது. மேலும், சிறிய நீர் மின் திட்டங்களுக்கான புதிய இணையதளத்தை அறிமுகப்படுத்திய அமைச்சர், இந்தியா மின் பற்றாக்குறை கொண்ட நாடாக இருந்து, இன்று உபரி மின்சாரம் கொண்ட நாடாகவும், உலகளாவிய உற்பத்தி மையமாகவும் மாறியுள்ளது என்றார். பாதுகாப்புத் துறையில் சூரியசக்தியைப் பயன்படுத்தும் வகையில் புதிய ஒப்பந்தமும் கையெழுத்தாகியுள்ளது.



# உரங்கள் வாங்குவதற்கு ஆதார் அட்டை, விற்பனை பில் கட்டாயம்

## வேளாண் துறை அறிவுறுத்தல்



பெரம்பலூர், ஜுன் 11

பெரம்பலூர் மாவட்டத்தில் யூரியா 2370 மெட்ரிக் டன், டிஏபி 885 மெட்ரிக் டன், பொட்டாஸ் 626 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் 2919 மெட்ரிக் டன், மற்றும் சூப்பர் பாஸ்பேட் 227 மெட்ரிக் டன், தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் இருப்பில் உள்ளது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் அறிவுரையின்படி, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் வட்டாரத்தில் உரம் விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு விற்பனை யாளர்கள் கண்டிப்பாக விவசாயிகளிடம் ஆதார் அட்டை கொண்டு பிஓஎஸ் இயந்திரம் மூலம் மட்டுமே எப்போதும் விற்பனை செய்ய வேண்டும், மற்றும் விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கக்கூடிய அனைத்து வகையான உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். எப்போதும் உரம் மூட்டையில் உள்ள அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்ய கூடாது. உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்கு களுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிக மாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக் கூடாது,

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் களைக் கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா பயன்படுத்தலாம். டிஏபி உரத்தை அடிவருமாக பயன் படுத்தலாம் டிஏபி பதிலாக நானோ டிஏபி பயன்படுத்துவதால் உரம் செலவு குறையும் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங் களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச் சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

# காய்கறி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி




சேலம், ஜூன் 11

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் பண்ணை பள்ளி உமையாள்புரம் கிராமத்தில் 11.06.26 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் வீரமணி (Agronomy) காய்கறியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மேலும் செல்லமுத்து, உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் விஜயகுமார் உதவி தோட்டக்கலை அலுவலர், வேளாண்மை துறை மற்றும் தோட்டக்கலை துறையின் திட்டங்கள் பற்றியும் விளைநிலம் பாதுகாப்பு இயக்கம் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை அட்மா பணியாளர்கள் ராஜ்குமார், சந்தோசம் மற்றும் பிரியங்கா ஆகியோர் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு

**மல்டி பழக் கலவை**

**தேவையான பொருட்கள்**

கிரணிப் பழத்துண்டுகள் 6

பைனாப்பிள் துண்டுகள் 4

சப்போட்டா இரண்டு

ஆரஞ்சு 1

ஆப்பிள் ஒன்று

வாழைப்பழம் ஒன்று

தேன் 4 தேக்கரண்டி



**செய்முறை**

எல்லா பழங்களையும் தோல் நீக்கி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு தட்டில் பரவலாக போட்டு தேன் ஊறறி அப்படியே சாப்பிடலாம். இதை தயாரிப்பது மிக மிக எளிது, மிகவும் சுவையானது எந்த நேரத்திலும் நாம் தயாரித்து உடனடியாக பயன்படுத்தலாம்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# பாரம்பரிய நெல் சாகுபடி மற்றும் மேம்பாடு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி




மதுரை, ஜூன் 11

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ATMA 2026-27 ஆம் ஆண்டு வடிவேல்கரை கிராமத்தில் பாரம்பரிய நெல் சாகுபடி மற்றும் மேம்பாடு உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை இணை இயக்குனர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. பாரம்பரிய நெல் சாகுபடி மற்றும் மேம்பாடு பாரதப் பிரதமரின் கௌரவ நிதி உதவி விழிப்புணர்வு முகாம் மற்றும் விளைநிலம் காப்போம் Khet Bachao Abhiyan கேத் பச்சோ அபியான் இயக்கத்தின் மூலம் சமச்சீரான உரப் பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக் கியத்தை மேம்படுத்துதல் குறித்தும் விளக்கம் அளித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம், பாரத பிரதமரின் கௌரவ நிதி திட்டம் மண்வளம் மற்றும் சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் சாகுபடி செலவை குறைப்பது காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது பசுந்தாள் உரப் பயன்பாடு குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். வேளாண்மை அலுவலர்கள் மண்வளம் பாதுகாப்பு குறித்தும் மண் மாதிரி எடுத்து செயல் விளக்கம் செய்து காட்டி மண்வளம் அட்டை வழங்கினார். அன்ன வயல் காளிமுத்து பாரம்பரிய நெல் சாகுபடி மற்றும் மேம்பாடு செயல்பாடு முறைகள் மண்வளம் பாதுகாப்பு பயிர் சுழற்சி முறை ஆகியவை குறித்தும் விவசாயி களுக்கு பயிற்சி அளித்தார். வடிவேல்கரை மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இம்மாவட்ட அளவிலான விவசாய பயிற்சி தொழில்நுட்ப மேலாளர் அழகர் மற்றும் மகாலட்சுமி ஏற்பாடு செய்திருந்தனர். இப்பயிற்சிக்கு ஏற்பாடுகளை செய்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா நன்றியுரை வழங்கினார்.

# அட்மா திட்டத்தின் கீழ் பண்ணைப்பள்ளி மற்றும் விவசாய நிலத்தை பாதுகாத்தல் குறித்த விவசாயிகள் பயிற்சி




அரியலூர், ஜூன் 11

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு இருகையூர் கிராமத்தில் எண்ணைய்வித்து பயிர்களின் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் குறித்த பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு நடைப்பெற்றது.

இப்பயிற்சியில் கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் ராஜாஜோஸ்லின், கலந்து கொண்டு விவசாயிகளிடத்தில் சிறப்புரை ஆற்றி பேசுகையில் எண்ணெய்–வித்துப் பயிர்களில் ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தை கடைப்பிடித்து குறைந்த செலவில் அதிக விளைச்சலை பெறும் வழிமுறைகள் குறித்து எடுத்துக்கூறினார். எண்ணெய் வித்துப்பயிர்களான எள், ஆமணக்கு, நிலக்கடலை, பயிர்களில் டி.விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்தல், விதைப்பு நிலம் தாயார் செய்தல், அடியுரமிடுதல் அவசியம் குறித்தும் ஒருங்கிணைந்த முறையில் உர நிர்வாக முறையினை பின்பற்றி மண் வளம் மற்றும் உடல் நலத்தை பாதுகாக்கலாம் என விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள சாகுபடி தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துகூறினார். இப்பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்புடன் விவசாய நிலத்தை பாதுகாப்பு இயக்கம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் கோடை உழவு, பஞ்சகாவியா தயாரித்தல் ஜீவாமிர்தம், மீன் அமிலம் இவற்றின் பயன்கள் குறித்தும் இயற்கை வேளாண்மை மற்றும் மண்பரிசோதனை செய்து உரமிடுதல், பசுந்தாள் உரப்பயிர்கள் மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தும் இரசாயன உர பயன்பாட்டை குறைத்து மண்வளத்தை மேம்படுத்தலாம் என்று விரிவாக விளக்கி கூறினார். மேலும் மண் ஆய்வு செய்து உரமிடுதலின் அவசியம் குறித்தும் கூறினார்.

முன்னதாக அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்று பேசுகையில் வேளாண்மை துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் எடுத்துகூறினார். மற்றும் விவசாயிகள் அனைவரும் வேளாண்மைத்துறை மற்றும் சகோதரதுறைகளின் திட்டங்களைப் பெற விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற வேண்டியது அவசியம் மற்றும் அட்மா திட்டங்கள் குறித்து எடுத்துக்கூறினார். இப்பயிற்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் லெட்சுமி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் சரத்குமார் மற்றும் இருகையூர் கிராம விவசாய பெருமக்கள் கலந்துக் கொண்டனர்.



# நவீன வேளாண்மையில் வாழை பழத்தின் பயன்கள்



வாழையில் அதிக ஈரப்பதம் இருப்பதால் அது விரைவில் அழுகும் தன்மை கொண்டது. எனினும் தகுந்த தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வாழையி லிருந்து நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும் பொருட்கள் தயாரிக்க முடியும்.

வாழையை பதப்படுத்தி விற்பனை செய்தால் விவசாயி வாழையை நல்ல விலைக்கு விற்று அதிக லாபம் அடைய முடியும். விற்க முடியாமல் மிகுதியாக உள்ள பழங்கள் கொண்டு தயார் செய்த பதப்படுத்தப்பட்ட வாழை பொருட்கள் 3-6 பொருட்கள் 3-6 மாத காலம் வரை கொடாமலிருக்கும் தன்மை பெறுவதாக மாறுகிறது. வாழையின் பல்வேறு உபயோகத்தால் அதனை கல்பதரு என்றும் மந்திர மூலிகை என்றும் அழைக்கப் படுகிறது. வாழையிலிருந்து உணவு, மருந்து, எரிபொருள், தீவனம் மற்றும் பல தொழிற்சாலை பொருட்கள் தயாரிக்கப் படுகிறது.

**வாழையில் மதிப்பூட்டிய உணவுப் பொருட்கள் தயாரிப்பு**

**உலர் வாழைப்பழம்**

● முற்றி இலேசாக மஞ்சள் நிறம் கலந்த பழங்களை தோல் உரித்து அவற்றை பொட்டாசியம் மொட்டாபைசல்பேட் கரைசலில் அரைமணி நேரம் ஊற வைக்க வேண்டும். (1 லிட்டர் தண்ணீருக்கு 7.4 கிராம் என்ற விகிதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்)

● பின்பு பழத்தை எடுத்து உரை வைக்கும் இயந்திரத்தில் தட்டுகளில் பரப்பி 50 டிகிரி செண்டிகிரேடு வெப்பத்தில் உலர வைக்க வேண்டும்.

● மேலை நாடுகளில் இவ்வாறு உலர வைக்கப்பட்ட பழங் களுக்கு நல்ல வரவேற்புள்ளது.

**சர்க்கரை கரைசலில் பழங்களை பதப்படுத்துதல்**

● வாழைப்பழம் – 1 கிலோ

● சர்க்கரை – ¾ கிலோ

● சிட்ரிக் அமிலம் – 3 கிராம்

## செய்முறை



● உலர வைக்கப்பட்ட பழங்களுக்கு செய்தது போலவே பழங்களை தோல் உரித்து பொட்டாசியம் மொட்டா பைசல்பேட் கரைசலில் அரை மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

● ஒரு கிலோ பழத்திற்கு ¾ கிலோ அளவு சர்க்கரையை மூன்று பங்குகளாக பிரித்து ஒரு பங்கு சர்க்கரையை பழம் மூழ்கும் அளவிற்கு நீர் எடுத்து கொண்டு கொதிக்க விட வேண்டும்

● அதில் பழங்களை இட்டு, இலேசாக சூடு ஆனவுடன் இறக்கி விட வேண்டும்

● பழத்துண்டுகளை வெளியே எடுத்து இரண்டாம் நாள் மற்றொரு பங்கு சர்க்கரையை சாக்கரைக் கரைசலில் போட்டு மூடி வைக்க வேண்டும்

● இதனை மூன்றாம் நாள் , இரண்டாம் நாள் செய்தது போல செய்ய வேண்டும். முதல் நாள் சரக்கரையின் அளவு பிரிக்ஸ் இருக்க வேண்டும்.

● இரண்டு அல்லது மூன்று பழங்களை அப்படியே சர்க்கரை பாகில் ஊறவ விட வேண்டும்.

● பின் பழத்துண்டுகளை வெளியே எடுத்து உலர வைக்கும் இயந்திரத்தில் தட்டுகளில் உலர வைக்க வேண்டும்.

● பழங்களை வட்டமாக வெட்டியோ முழுப்பழமாகவோ இதனை தயாரிக்கலாம்.

● இதை ஆஸ்மாடிக் டிஹைறரெடட் பானா என்று ஆங்கிலத்தில் கூறுவரார்கள்.

● இம்முறை தயாரிப்பதற்கு மற்ற பழங்களை விட கற்பூரவல்லி பழம் ஏற்றதாகும்.



தகவல் : ***யுவராஜா தட்சிணா மூர்த்தி, வேளாண்மை உதவி பேரராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை மற்றும் வாணி, தொடர்புக்கு : 88388 25432***

# வெங்கடாசலபுரத்தில் நெல் சாகுபடி குறித்த களப் பயிற்சி



திருச்சி, ஜுன் 11

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, குறுவைக்கேற்ற உயர் விளைச்சல் நெல் இரகங்கள் மற்றும் மேலாண்மை தொழில்நுட்பங்கள் பற்றிய ஒரு நாள் களப் பயிற்சி புள்ளம்பாடி வட்டாரம் வெங்கடாசலபுரம் கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர் முனைவர் ராதிகா, நெல்லில் குறுவை பருவத்துக்கு ஏற்ற நவீன இரகங்கள், அதன் சிறப்பியல்புகள், நெல்லில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள், மண் பரிசோதனை, நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் இயற்கை முறை நெல் உற்பத்தி குறித்து எடுத்துரைத்தார். இணைப்பேராசிரியர் முனைவர் மாரிமுத்து விளைநிலம் பாதுகாப்போம் இயக்கத்தின் முக்கிய குறிக்கோளான சமச்சீர் உர பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் புள்ளம்பாடி வட்டார வேளாண் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

isha LMW POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விளைநிலம் காப்போம் - ஏன்? எதற்காக?



விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மண் வளத்தை பாதுகாக்கவும் மத்திய, மாநில அரசுகளால் ‘விளைநிலம் காப்போம்‘ (KHET BACHAO ABHIYAN) என்ற இயக்கத்தை ஜூன் 1 முதல் 30 வரை நாடெங்கும் விழிப்புணர்வு முன்னெடுப்புகளாக தீவிர மாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**ஏன் விளைநிலத்தை காக்க வேண்டும்?**

உழதுண்டு வாழ்வாரே வாழ்வார்‘ என்பது குறள். மனித குலத்தின் அடிப்படைத் தேவையான உணவு உற்பத்திக்கு ஆதாரமாக இருப்பது விளைநிலங்களே. ஆனால் அப்படிப்பட்ட விளைநிலம் இன்றைய நவீன யுகத்தில் சிதறுண்டு தொழில் மயமாக்குதல், நகரமயமாக்குதல் என்ற பெயரில் பெருமளவில் அழிக்கப்படுகின்றன.

வருங்கால தலைமுறைகளுக்கு உணவு பாதுகாப்பை (FOOD SECURITY) உறுதி செய்ய விளைநிலங்களை பாது காப்பது ஒவ்வொரு இந்திய குடிமகனின் தலையாய கடமை யாகும். இருக்கின்ற விளைநிலத்தை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். அதுவும் மண் வளத்துடன் இருந்தால் தான் மகசூல் கிட்டும்.

**விளைநிலங்கள் அழிய காரணங்கள்?**

**1) நகரமயமாக்கல்**

அதிகரித்த வரும் மக்கள் தொகைக்கேற்ப குடியிறுப்பு வீடுகளின் தேவைக்காக விவசாய நிலங்கள் வீட்டு மனையாக (பிளாட்) மாற்றப்படுகின்றன.

**2) தொழிற்சாலைகளின் கழிவுகள்**

அதிகரித்து வரும் தொழிற்சாலைகளின் கழிவுகள் (WASTE) நிலத்தில் கலந்து வளமான பூமியை வளமாற்றதாக மாற்றி விடுகின்றன.

**3) மிதமிஞ்சிய இரசாயன உரங்களின் பயன்பாடு**

விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டும் என்ற வெறித் தனமான மனநிலையில் பயிரின் தேவைக்கு மேலாக உரத்தை வயலில் கொட்டுகின்றனர் (யூரியா). இதனால் மண் வளம் இறுகி நுண்ணுயிர் பெருக்கமும் அழிந்து விடுகின்றன.

**விளைநிலைத்தை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்?**

**1) இயற்கை விவசாயம்**
ஒவ்வொரு விவசாயியும் தங்களுடைய நிலப்பரப்பில் குறைந்தபட்சமாக 25% பகுதியில் இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும்.

**2) மண் பரிந்துரைக்கேற்ப உரமிடல்**
மண்வளத்தை தெரிந்து அதற்கேற்ப உயிர் உரங்கள் இயற்கை உரங்களை பயன்படுத்திட வேண்டும்.

3) பூச்சிகளின் (E.T.L) நிலை அறிந்து பூச்சி மருந்து தெளித்தல்.

4) களைக்கொல்லி பயன்பாட்டை குறைக்க வேண்டும்.

5) சமச்சீரான உர மேலாண்மையை பின்பற்றிட வேண்டும்.

6) நிலப்பயன்பாட்டு சட்டம்

விளைநிலங்களை வணிக பயன்பாட்டுக்கு மாற்றுவதை தடுக்க கடுமையான சட்டம் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். உழவே தலை என போற்றப்படும் நம்முடைய நாட்டில் விவசாயிகள் விளைநிலங்களை பாதுகாப்பதும் மலடாக்காமல் காப்பதும் ஒவ்வொருவரின் கடமையாகும்.

***விளைநிலத்தை காப்போம்!!***
***மண்வளத்தை பெருக்குவோம்!!!!***

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# வேளாண்மை துறை அமைச்சர் ஆய்வு

கோயம்புத்தூர், ஜுன் 11

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஆர்.வினோத், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை பார்வையிட்டார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கா.சுப்பிரமணியன், வேளாண்மை துறை அமைச்சரை வரவேற்றார். முதலாவதாக பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்களுடன் கலந்துரையாடலை தொடங்கினார். பின்னர் பல்கலைக்கழகத்தின் நெல் ஆராய்ச்சி மையத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்கு காட்சிப்படுத்தப்பட்ட நெல் ரகங்கள் மற்றும் அவற்றின் சாகுபடி குறித்தும் கேட்டு தெரிந்து கொண்டார். அதைத்தொடர்ந்து பல்கலைக்கழக பழத் தோட்டத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் பல்கலைக்கழக மாணவ மாணவியர் தங்கும் விடுதி மற்றும் உணவு அருந்தும் விடுதி ஆகியவற்றை ஆய்வு செய்து மாணவ மாணவிகளுடனும் கலந்துரையாடி விடுதியின் நிறைகுறைகளை கேட்டு அறிந்தார்.

அதைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் மத்திய கிழக்கு பண்ணை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிக மையம், தாவரவியல் பூங்கா, நானோடெக், காக்ஸ்பிட், பூச்சி அருங்காட்சியகம் ஆகிய துறைகளையும் பார்வையிட்டார்.

இறுதியாக பல்கலைக்கழக மாணவ மாணவிகளுடன் அண்ணா அரங்கில் கலந்துரையாடி மாணவர்களுக்கு வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் இன்றியமையாமை குறித்து சிறப்புரை வழங்கினார். மாணவ மாணவிகளும் ஆர்வத்துடன் வேளாண்மை துறை அமைச்சருடன் கலந்துரையாடினர்.

இந்நிகழ்வுகளை பல்கலைக்கழக பொறுப்புத் துணைவேந்தர் முனைவர் கா சுப்பிரமணியன், பல்கலைக்கழக வேளாண்மை முதன்மையர் முனைவர் நா வெங்கடேசபழனிச்சாமி மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் முனைவர் மா ரவீந்திரன் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்தனர்.

# பயிர் கழிவுகளை உரமாக மாற்றும் முறை

விவசாயிகள் நிலங்களில் பயிர் அறுவடை மேற்கொள்ளும் போது அறுவடை போக மீதமுள்ள பயிர்க் கழிவுகளான நெல் வைக்கோல், மக்காச்சோளத் தட்டை, சோளத் தட்டை, பருத்தி செடி போன்ற தேவையற்ற பகுதிகள் பயிர்க் கழிவுகள் (Crop Residues) என அழைக்கப்படுகின்றன. இவற்றை வயலில் எரிப்பதற்குப் பதிலாக, இயற்கை உரமாகவோ அல்லது மதிப்புமிக்க பொருட்களாகவோ மாற்றுவது சிறந்தது.




நெல், வைக்கோல், சோளம், கம்பு மற்றும் மக்காச்சோளத் தட்டை போன்ற தானியக் கழிவுகளும், பருத்திச் செடிகள் மற்றும் கரும்புத் தோகை போன்ற பணப்பயிர் கழிவுகள் மற்றும் நிலக்கடலைத் தோல், தேங்காய் நார் மற்றும் மரவட்டை கழிவுகள் போன்ற பிற பயிர்க் கழிவுகளில் இருந்து இயற்கை உரம், கால்நடைத் தீவனம், மதிப்பு கூட்டுதல் மூலம் பல முறைகள் உள்ளன.

பயிர்க் கழிவுகளை சிறு துண்டுகளாக வெட்டி, சாணம் மற்றும் மாட்டின் சிறுநீருடன் கலந்து 3 முதல் 4 மாதங்கள் நிழலில் மக்கச் செய்வதன் மூலம் சிறந்த உரம் தயாரிக்கலாம். மேலும் மண்புழு உரம் (Vermi Compost) தயாரிக்கவும், காளான்கள் வளர்க்கவும் பயன்படுகின்றன. வைக்கோல் மற்றும் மக்காச் சோளத் தாள்கள் கால்நடை களுக்கு உணவாகப் பயன்படு கின்றன. பயிர்க் கழிவுகளை முறையாக நிர்வகிப்பதன் மூலம் மண்வளம் மேம்படுவதுடன் காற்று மாசும் தடுக்கப்படுகிறது.

பயிர்க் கழிவுகள் மக்கி உரமாவதால் மண்ணிற்குத் தேவை யான தழை, மணி, சாம்பல் சத்துக்கள் இயற்கையாக கிடைக் கின்றன. மண்புழுக்கள் மற்றும் நன்மை செய்யும் பாக்டீரிய- ாக்களின் எண்ணிக்கை அதிகரித்து மண் பொலபொலப்பாகும். இதனால் இரசாயண உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து பணத்தைச் சேமிக்கலாம். சோளம், கம்பு மற்றும் நெல் கழிவுகள் கால்நடைககுக்கு சிறந்த தீவனமாகப் பயன்படு கின்றன. பயிர்க் கழிவுகளை வயலில் வைத்து எரிப்பது தடுத்து நிறுத்தப்படுவதால், புகை மற்றும் காற்று மாசு ஏற்படுவது முற்றிலுமாகத் தவிர்க்கப்படுகிறது.

காற்றில் கரியமில வாயு கலப்பது குறைந்து சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது என்பதனை மதுரை விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, விருதுநகர் வேளாண்மை அலுவலர்கள் ஐ.ஜானகி மற்றும் பா.சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



# நானோ விழிப்புணர்வு முகாம்




விழுப்புரம், ஜூன் 11

விழுப்புரம் மாவட்டத்தில், "KHET BACHAO ABHIYAN" விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இப்கோ நிறுவனத்தின் கள அதிகாரி ஹரிஷ் கௌதம், நானோ உரங்கள் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள் குறித்து விவசாயி களுக்கு விரிவாக விளக்கினார். குறிப்பாக, மண் வளத்தை பாதுகாப்பது, உர பயன்பாட்டை திறம்பட நிர்வகிப்பது மற்றும் தற்போதைய உரத் தேவையை சமாளித்து விளைச்சலை அதிகரிப்பதில் அவற்றின் பங்கு குறித்து எடுத்துரைத்தார். மேலும், இப்கோ ட்ரோன் தொழில்நுட்பத்தின் மூலம் வேளாண் உள்ளீடுகளை துல்லியமாகப் பயன்படுத்துதல், விவசாயிகளின் செலவைக் குறைத்தல், செயல்திறனை அதிகரித்தல் போன்ற பல நன்மைகள் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டன. இந்நிகழ்ச்சி, நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்த்து, நிலையான மற்றும் முன்னேற்றமான விவசாயத்தை ஊக்குவிக்கும் முயற்சியாக அமைந்தது.

# விவசாயிகளுக்கு மண்பரிசோதனை பயிற்சி முகாம்

கிருஷ்ணகிரி, ஜூன் 11


கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாரம், மஜீத்கொல்லஹள்ளி கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு மண் பரிசோதன பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு உதவி வேளாண்மை அலுவலர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். நடமாடும் மண்பரிசோதனை ஆய்வகம் (MSTL) மூலம் மண் பரிசோதனை செய்தல் மூத்த வேளாண்மை அலுவலர் ஏரோ சோனியாபோட் பேசுகையில் மகசூல் அதிகரிக்க மண்பரிசோதனை அத்தியாவசியமாகும் குறைந்த செலவில் அதிக லாபம் ஈட்டும் மந்திரத்தை மண்பரிசோதனைகளை சாத்தியப்படுத்துகின்றன.

சாகுபடி பரப்பு அதிகரித்தாலும் குறைந்த பரப்பில் அதிக மகசூல் பெற உரங்களின் செலவை குறைத்து அதிக லாபம் ஈட்ட மண் பரிசோதனை அவசியம். குறிப்பாக பயிர்களுக்கு 16 வகையான ஊட்டச்சத்துக்கள் தேவைப்படுகின்றன. இவை பேரூட்டச்சத்துகள், இரண்டாம் நிலைச்சத்துகள், நுண்ணூட்டச்சத்துகள் என வகைப் படுத்தப்படுகின்றன. மகசூல் அதிகம் கிடைக்க இந்தச் சத்துக்கள் சமச்சீராக கிடைக்க வேண்டும். இதனை அறிய மண்பரிசோதனை, நீர்பரிசோதனை செய்ய வேண்டும். அதில் கிடைக்கும் முடிவுகளின் படி, எந்தச் சத்துகள் குறைவாக உள்ளதோ அதற்கு தகுந்தாற் போல் பயிரோ அல்லது உரமோ இட்டால் மகசூல் அதிகம் கிடைக்கும். உரிய முறையில் மண் பரிசோதனை செய்து அதற்கு தகுந்தார் போன்று பயிர்களை சாகுபடி செய்வதின் மூலம் விவசாயிகள் அதிக லாபம் ஈட்ட முடியும்.



இது குறித்து மண் பரிசோதனை மையத்தின் வேளாண்மை அலுவலர் கூறும் போது, ‘மண்பரிசோதனைக்கு ரூ.30 மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இந்த பரிசோதனை செய்து தங்கள் மண்ணில் எந்த வகையான சத்துக்கள் உள்ளன என்பதை தெரிந்து கொண்டு அதற்கேற்ப பயிர்களை விவசாயிகள் பயிரிட்டால் அதிக மகசூல் பெற முடியும். வேளாண்மை அலுவலர் பவித்ரா பேசுகையில் மண் மலடுதட்டாமல் இருக்க இயற்கை உரத்தை பயன்படுத்த வேண்டும். சோளம், தொழுஉரம், தழை, பஞ்சகாவியா, ஜீவாமிர்தம் மற்றும் பசுந்தாள் உரங்கள் விடுவதின் மூலம் மண்ணை மீட்டு எடுக்க முடியும் என்றார்.

வேளாண்மை அலுவலர் காருண்யா பேசுகையில் மண்ணை பரிசோதனை செய்து மண்வள அட்டையில் தெரிவித்தவாறே பயிருக்கான உரங்களை தேர்வு செய்ய வேண்டும். அப்போது தான் பயிர்களுக்கான சரியான மகசூல் கிடைக்கும். மண்வளமு பாதுகாக்கப்படும். மேலும் விவசாயிகள் தங்களுக்கு சொந்தமான நிலத்தில் உள்ள மண் எந்த தன்மையில் இருக்கிறது என அறிய பரிசோதனைக்கு மண்மாதிரியை எடுக்க பயிற்சி செய்து காண்பித்தனர். நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் பானுஸ்ரீ, உதவி வேளாண்மை அலுவலர்கள் திருமால், தனசேகர் மற்றும் பிரியதர்ஷினி. மேலும் நிகழ்ச்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பரசு, உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம், கிரிஜா ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# ரோவர் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சி




மதுரை, ஜுன் 11

ரோவர் வேளாண்மைக் கல்லூரியின் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கீ.இரா.மணிகண்டன் தலைமையில், ரோவர் வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள் வணிகத் தேனீ வளர்ப்பு பாடத்தின் ஒரு பகுதியாக மதுரையில் அமைந்துள்ள விபிஸ் ஹனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு கல்விசார் பயணம் மேற்கொண்டு தொழில் முனைவோர் பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சியின் போது மாணவர்கள் இந்தியத் தேனீ மற்றும் கொசுத் தேனீ வளர்ப்பு முறைகள், தேனீக் கூட்டங்களின் மேலாண்மை, பராமரிப்பு நுட்பங்கள் மற்றும் தேன் உற்பத்தி தொடர்பான நடைமுறை செயல்பாடுகளை நேரடியாகக் கற்றறிந்தனர். மேலும், வணிக ரீதியிலான தேனீ வளர்ப்பில் மேற்கொள்ளப்படும் தினசரி பணிகள் மற்றும் மேலாண்மை நடைமுறைகள் குறித்தும் விளக்கம் பெற்றனர். தொடர்ந்து, விபிஸ் ஹனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஜோசபினுடன் மாணவர்கள் கலந்துரையாடினர்.

அப்போது, தேனீ வளர்ப்புத் துறையில் உள்ள தொழில் முனைவு வாய்ப்புகள், தேன் உற்பத்தி, தர மேலாண்மை, சந்தைப்படுத்தல் உத்திகள் மற்றும் தொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள் குறித்து தனது 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

இந்தக் கல்விசார் பயணம் மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி மூலம், இறுதியாண்டு மாணவர்கள் தேனீ வளர்ப்பின் பொருளாதார முக்கியத்துவம், மதிப்புக்கூட்டப்பட்ட தேனீப் பொருட்கள் தயாரித்தல், சந்தைப்படுத்தல் உத்திகள் மற்றும் சுயதொழில் வாய்ப்புகள் குறித்து ஆழமான புரிதலைப் பெற்றனர்.

# நிலக்கடலையில் பண்ணைப்பள்ளி பயிற்சி




சேலம், ஜூன் 11

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம் ஆரியகவுண்டம்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி முதல் வகுப்பு நடைபெற்றது.

பண்ணைப்பள்ளி என்பது விதை முதல் விதை வரை என்ற தத்துவத்தின் அடிப்படையில் நிலக்டலையில் பருவம், ரகம் தேர்வு, நடவு, களை மேலாண்மை, உர மேலாண்மை, பூச்சி நோய் மேலாண்மை, அறுவடை மற்றும் அறுவடை பின்செய் நேர்த்தி ஆகிய பயிரின் நிலைகளுக்கு ஏற்ப நான்கு வகுப்புகள் நடைபெற உள்ளது.

இப்பண்ணைப்பள்ளியின் முதல் வகுப்பு நிலக்கடலைக்கு ஏற்ற பருவம், மண் மாதிரி எடுத்தல், இரகம், விதை அளவு, இராசயன மற்றும் உயிரியல் விதை நேர்த்தி மற்றும் விதைப்பு முறைகள் குறித்த தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் கே.பழனிசாமி சிறப்பு பயிற்சியாளராக கலந்து கொண்டு 25 விவசாயிகளை 5 குழுக்களாக பிரித்து முன்னோடி விவசாயி வேலு வயலில் பயிற்சி அளித்தார். டி.விரிடி என்ற உயிரியல் பூஞ்சான கொல்லி கொண்டு நிலக்கடலை விதை நேர்த்தி மற்றும் மண்மாதிரி எடுத்தல் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.துணை வேளாண்மை அலுவலர் (பொ) ப.மூர்த்தி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன், உதவி தொழில்நுட்ப மேலாளர் சி.சரஸ்வதி கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# திருவண்ணாமலை விதைப்பரிசோதனை நிலையத்தில் தொழில்நுட்ப மற்றும் பொருள் ஆய்வு

திருவண்ணாமலை, ஜுன் 11

விதைப்பரிசோதனை அலுவலர் D.சிவவீரபாண்டியன், தஞ்சாவூர், 08.06.26 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் தொழில்நுட்ப ஆய்வு மற்றும் பொருளாய்வு மேற்கொண்டார். முதலில் விதை முளைப்பு அறையை பார்வையிட்டார். விதை முளைப்பு அறையில் வெப்பநிலை 25'c மற்றும் ஈரப்பதம் 92% உள்ளதையும் ஈரப்பதம் கண்டறியும் கருவியின் மூலம் விதையின் ஈரப்பதம் கண்டறிந்தார். விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகளை கிடைக்க செய்ய சீரீய பணிகளை சிறப்புடன் செய்ய அறிவுரை வழங்கினார். விதை முளைப்பு அறை மற்றும் காப்பு மாதிரிகள் அறை நல்ல முறையில் பராமாரிக்கபட வேண்டும் என்பதையும் கூறினார். மேலும் 2025-2026 ஆம் ஆண்டிற்கான சான்று விதை மாதிரிகள், ஆய்வு விதை மாதிரிகள், பணி விதை மாதிரிகள் பதிவேடுகள் அனைத்தையும் ஆய்வு மேற்கொண்டார். சான்று விதை மாதிரிகள் அட்டைகள், ஆய்வு விதை மாதிரிகள் அட்டைகள் மற்றும் பணி விதை மாதிரிகள் அட்டைகள் அனைத்தையும் பார்வையிட்டார். Log Book அனைத்தையும் சரியாக உள்ள னவா என்று சரி பார்த்தார். பொருளாய்வு மேற் கொள்ளும் போது அனைத்து Instruments அனைத்து சரியாக இயக்குகிறதா என்பதையும் ஆய்வு மேற்கொண்டார். விதைப் பரிசோதனை நிலையம் நல்ல முறையில் உள்ளது, இதே நிலையில் நல்ல முறையில் விதைப்பரிசோதனை நிலையத்தை வைத்து கொள்ளுங்கள் என்று கூறி பாராட்டினார். இவ்வாய்பின் போது மூத்த வேளாண்மை அலுவலர் ஜெ.பத்மா மற்றும் வேளாண்மை அலுவலர் இரா.கலைச்செல்வி இருவரும் உடன் இருந்தார்கள்.




# புதிய சன்ன நெல் இரகங்கள் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி

ஈரோடு, ஜூன் 11

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு புதிய சன்ன அரிசி நெல் ரகங்கள் மற்றும் அதன் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைபெற்றது.




இது குறித்து சத்தியமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ந.சரோஜா தெரிவித்துள்ளதாவது. உக்கரம் வருவாய் கிராமத்தில் விவசாயிகளுக்கு புதிய சன்ன ரகங்கள் மற்றும் அதன் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சியில் வேளாண் அறிவியல் மையம் கோபிசெட்டிபாளையம் பிரேமலதா, புதிய சன்ன ரகங்கள் மற்றும் அதன் சாகுபடி தொழில் நுட்பங்கள், மதிப்பு கூட்டல் செய்தல் போன்ற விவரங்களை விளக்க மாக கூறினார். வேளாண் ஆராய்ச்சி நிலையம் பவானிசாகர் விஞ்ஞானி சத்தியசீலன், ரசாயான உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்ஙக உரப் பயன்பாட்டை மேம்படுத்த வேண்டு;ம். மேலும் உயிர் உரங்கள் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் மண் வளம் காக்கப்படும் என்பதை விளக்கமாக கூறினார். மரகதம், உதவி வேளாண்மை அலுவலர், வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப் படும் மானிய திட்டங்கள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துக் கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக், அட்மா திட்டம் செயல் பாடுகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் நந்தினி, உழவன் செயலி மூலம் பதிவு செய்யும் முறை களை தெளிவாக எடுத்துரைத்தார்.

# கொடுமுடியில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஈரோடு, ஜூன் 11

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம், வேளாண்மைத் துறை சார்பில் கொந்தளம் கிராமத்தில் 'விளைநிலங்களை காப்போம்' விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு கொடுமுடி வட்டார துணை வேளாண்மை அலுவலர் கந்தசாமி தலைமையில் நடைப்பெற்றது.

துணை வேளாண்மை அலுவலர் மண்வள பாதுகாப்பு மற்றும் மண் பரிசோதனை மற்றும் நுண்ணுயிர் பெருக்கம் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு ஆகியவை குறித்து பயிற்சி அளித்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் சிவப்பிரியா இராசயன உரங் களை குறைத்து இயற்கை உரங்கள் பயன்பாட்டை அதிகரிக்க செய்யும் பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்களை அதிகம் பயன்படுத்துவதால் விவசாயி களுக்கு உரச் செலவு குறையும் என்று எடுத்து கூறினார். உதவி தோட்டக்கலை அலுவலர் இராம சந்திரன் தோட்டக்கலை சார்ந்த திட்டங்களையும் விவசாய அடையாள அட்டை பற்றியும் கூறினார்.

# சென்னசந்திரம் கிராமத்தில் மண் மாதிரி சேகரித்தல் விழிப்புணர்வு முகாம்

கிருஷ்ணகிரி, ஜூன் 11

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில், சென்னசந்திரம் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தொடங்கி வைத்து மண் மாதிரி எடுத்தல் மற்றும் அவற்றின் நன்மைகள் குறித்து விளக்கம் அளித்தார். இந்த முகாமின் போது, கிருஷ்ணகிரி, மண் பரிசோதனை நிலையம், வேளாண்மை அலுவலர், சாந்தி கலந்து கொண்டு மண் மாதிரி எடுக்க வேண்டிய இடங்களில் புல், பூண்டுகள் கைகளால் பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். அந்த இடத்தில் 'V' வடிவத்தில் ஒரு குழி தோண்ட வேண்டும். இந்த குழியின் ஆழம் பயிருக்கு பயிர் மாறுபடும். 'V' வடிவத்தில் குழியின் ஒரு பக்கத்தில் கீழிருந்து வமலாக ஒரு செ.மீ கணத்திற்கு மண்ணை சுரண்டி எடுக்க வேண்டும். இவ்வாறு 10 இடங்களில் குழிகள் தோண்டி மண் மாதிரி எடுக்க வேண்டும்.




இவ்வாறு சேகரித்த மண் மாதிரிகளை ஒரு காகித விரிப்பின் மேல் போட்டு, நன்றாக கலக்க வேண்டும். இதிலிருந்து அரைக் கிலோ மண்ணை, கால் பங்கீடு முளறயில் பிரித்து எடுக்க வேண்டும். காகித விரிப்பில் மண்ணை சீராகப் பரப்பி போட்டு, அதன் மீது குறுக்கும் நெடுக்குமாக + வடிவத்தில் இரண்டு கோடுகள் கைளால் போட வேண்டும். அப்போது மண் நான்கு கால் 1/4 பாகங்களாகப் பிரிந்து காணப்படும்.

அதில் எதிர் எதிரே உள்ள இரண்டு கால் பாகங்களை நீக்கி விட்டு, மீதம் உள்ள இரண்டு கால் பாகங்களள மறுபடியும் ஒன்றாகக் கலந்து, மேற்கண்ட முறையில் மீண்டும் மண்ணை பிரித்தெடுக்க வேண்டும். இவ்வாறு பலமுறை செய்து, அரைக் கிலோ மண்ணை எடுக்க வேண்டும் என்று விளக்கி கூறினார்,

கிருஷ்ணகிரி, நடமாடும் மண் பரிசோதனை நிலையம், வேளாண்மை அலுவலர், ஆரோ சோனியா பிரட் மற்றும் காருன்யா கலந்து கொண்டு மண் பரிசோதனை மூலம் மண்ணில் உள்ள பேரூட்டங்களின் அளவுகளையும், மண்ணின் நிறைகுறைகளையும் தெரித்து கொண்டு அதற் கேற்ற உயிர் உரங்களையும், யூரியா அளவுகளளயும் பரிந்துரைக்கிறது. இதனால் உரச் செலவை கணிமாக குறைக்க முடியும். மண்ணில் உள்ள களர், உவர், அமிலத்தன்மைகளை கண்டறிய உதவுவதுடன் அதற்கு இடவேண்டிய ஜிப்சம் அளவையும் அமில நிலத்திற்கு இட வேண்டிய சுண்ணாம்பு அளவையும் துல்லியமாகக் கண்டறிய முடிகிறது. மண்ணில் உள்ள கரையும் உப்புகளின் அளவுகளை கண்டறிந்து, அதற்கேற்ற பயிர்களை தேர்வு செய்து பயிரிட முடிகிறது. உப்பை தாங்கி வளரக்கூடிய சூரிய காந்தி, பருத்தி, போன்ற பயிர்களை தேர்வு செய்து பயிரிட முடிகிறது.

மண்ணில் உள்ள கரிமச்சத்து அளவுகளை அறிந்து அதற்கேற்ப கரிம உரங்களையும், உயிர் உரங்களையும் பயன்படுத்தி, வளங்குன்றா வகையில் மண் வளத்தை பராமரிக்க முடிகிறது என்று விளக்கி கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன், உயிர் உர விதை நேர்த்தி செய்தல், தரமான வீரிய ரகங்களை தேர்வு செய்ய வேண்டும், மற்றும் சொட்டுநீர் பாசன திட்டத்தின் நன்மைகள் பற்றி தெளிவாக கூறினார். இந்த முகாமில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். கலந்துக் கொண்ட விவசாயிகளுக்கு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. கிருஷ்ணகிரி, உதவி வேளாண்மை அலுவலர் பிரியதர்ஷினி, அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் கவிதா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாரதிராஜா மற்றும் பிரியா ஆகியோர் கலந்து கொண்டு முகாமிற்கான ஏற்பாடுகள் செய்தனர்.



# கூண்டுக் கோழி கழிவுகளிலிருந்து மக்கிய உரம் தயாரித்தல்

இன்றைய காலகட்டத்தில் இயற்கை விவசாயம் மீதான ஆர்வம் விவசாயிகளிடையே அதிகரித்து வருகிறது. மண்ணின் வளத்தைப் பாதுகாப்பது, உற்பத்திச் செலவைக் குறைப்பது மற்றும் தரமான விளைபொருட்களைப் பெறுவது ஆகிய நோக்கங்களுக்காக இயற்கை உரங்களின் பயன்பாடுநாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. அந்த வகையில், கோழிப் பண்ணைகளில் கிடைக்கும் கூண்டுக் கோழி கழிவுகளை மக்கிய உரமாக மாற்றி பயன்படுத்துவது மிகவும் பயனுள்ள மற்றும் செலவுக் குறைந்த தொழில்நுட்பமாகும். கோழி வளர்ப்புத் தொழில் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், கோழிக் கழிவுகளை சரியான முறையில் மேலாண்மை செய்வது ஒரு முக்கிய சவாலாக உள்ளது. இந்தக் கழிவுகளை வீணாக்காமல், மதிப்புமிக்க இயற்கை உரமாக மாற்றுவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பும், விவசாய வளர்ச்சியும் ஒரே நேரத்தில் சாத்தியமாகிறது.

### கூண்டுக் கோழி கழிவுகள் என்றால் என்ன?

கோழிகள் வளர்க்கப்படும் கூண்டுகளில் சேரும் எச்சங்கள், சாணம், தீவன மீதிகள், இறகுகள் மற்றும் படுக்கைப் பொருட்கள் ஆகியவற்றின் கலவையே கூண்டுக் கோழி கழிவுகள் ஆகும். இவை தாவர வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு ஊட்டச் சத்துக்களை அதிகளவில் கொண்டுள்ளன.

### ஏன் நேரடியாக பயன்படுத்தக்கூடாது?

புதிய கோழிக்கழிவுகளில் அமோனியா மற்றும் அதிகளவு நைட்ரஜன் காணப்படும். இவற்றை நேரடியாக நிலத்தில் பயன்படுத்தும் போது :

- தாவர வேர் சேதமடையலாம்.
- விதை முளைப்பு பாதிக்கப்படலாம்.
- ஈக்கள் மற்றும் நோய்க் கிருமிகள் பெருக வாய்ப்புள்ளது.

எனவே, கோழிக்கழிவுகளை மக்கிய உரமாக மாற்றிய பிறகே வயல்களில் பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது.

**மக்கிய உரம் தயாரிக்கும் முறை**

**இடத்தேர்வு**

நிழலான மற்றும் நீர் தேங்காத இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். தரையில் குழி அமைத்தோ அல்லது மேடை அமைத்தோ உரம் தயாரிக்கலாம்.

**தயாரிப்பு நடைமுறை**

முதலில் உலர்ந்த இலைகள் அல்லது வைக்கோலை ஒரு அடுக்காக பரப்ப வேண்டும். அதன் மேல் கோழிக்கழிவுகளை பரப்ப வேண்டும்.

இவ்வாறு மாறி மாறி பல அடுக்குகள் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு அடுக்கிற்கும் தண்ணீர் தெளித்து சுமார் 60 சதவீத ஈரப்பதம் பராமரிக்க வேண்டும். மக்கிய செயல் முறையை வேகப்படுத்த மாட்டுச் சாணக் கரைசல் அல்லது நுண்ணுயிர் கரைசல்களைத் தெளிக்கலாம். 1 5 முதல் 20 நாட்களுக்கு ஒரு முறை குவியலைத் திருப்பிப் போட வேண்டும். இதனால் காற்றோட்டம் கிடைத்து, மக்கிய செயல்முறை சீராக நடைபெறும்.

**மக்கிய உரம் தயாராகும் காலம்**

பொதுவாக 45 முதல் 60 நாட்களுக்குள் உரம் முழுமையாக மக்கிய நிலையில் கிடைக்கும். மக்கிய உரம் :

- கருமை நிறத்தில் இருக்கும்.
- மண்வாசனை வீசும்.
- வெப்பம் குறைந்திருக்கும்.
- கைகளில் ஒட்டாது.

இவை உரம் தயாராகி விட்டதற்கான அடையாளங்களாகும்.

**மக்கிய உரத்தில் உள்ள ஊட்டச்சத்துக்கள்**

- நைட்ரஜன் – 2 முதல் 4%
- பாஸ்பரஸ் – 2 முதல் 3%
- பொட்டாசியம் – 1 முதல் 2%

வரை காணப்படுகின்றன. இது பல்வேறு பயிர்களுக்கு தேவை யான அடிப்படை ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.

**மண்ணிற்கு கிடைக்கும் நன்மைகள்**

கோழிக்கழிவு மக்கிய உரம் மண்ணின் கரிமச்சத்தை அதிகரிக்கிறது. மண்ணின் அமைப்பை மேம்படுத்தி நீர்பிடிக்கும் திறனை உயர்த்துகிறது. மேலும், மண்ணில் வாழும் பயனுள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது.

**பயிர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்**
**மக்கிய உரத்தை பயன்படுத்துவதன் மூலம் :**

- விதை முளைப்பு சீராக நடைபெறும்.
- தாவர வளர்ச்சி வேகமாக இருக்கும்.
- இலைகள் பசுமையாக வளர்கின்றன.
- பூக்கும் மற்றும் காய்க்கும் திறன் அதிகரிக்கிறது.
- மகசூல் உயர்கிறது.
- விளைபொருட்களின் தரம் மேம்படுகிறது.

**பொருளாதார பலன்கள்**

கோழிக் கழிவுகளை உரமாக மாற்றுவதன் மூலம் விவசாயிகள் இரசாயன உரங்களுக்காக செலவிடும்ெ தாகையை குறைக்க முடியும். கோழிப் பண்ணை உரிமையாளர்களும் கழிவுகளை விற்பனை செய்து கூடுதல் வருமானம் பெற முடியும்.

தகவல் : ***குளோரி கே.எஸ்., மற்றும் சி.பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை), கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, உசிலம்பட்டி.***



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**